DEPOSITION OF WITNESS

Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, VANUR.

Calender - C.C.No. 70/2018
Miscellaneous -

Sessions -

Deposition of witness for Prosecution PW5 (LW2)
Defence

Name : Nagalakshmi

Father Name /
Husband Name : Muthukrishnan

Village :

Taluk :

Caste : -

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 the day of 9th June 2026.

எதிரி ஆஜர்.

சாட்சியை வானூர் காவல் நிலைய பெண் த.காவலர் திருமதி. மோகனா என்பவரால் அடையாளம் காண்பிக்கப்பட்டார்.

முதண்மை விசாரணை

நான் திருவக்கரையில் குடியிருந்து வருகிறேன். நான இல்லத்தரசியாக இருந்து வருகிறேன். அசா.1 முத்துக்கிருஷ்ணன் எனது

கணவர் ஆவார். ஆஜர் எதிரியை தெரியும். சுமார் 7 வருடங்களுக்கு முன்பு காலை 8.30 மணிக்கு எறையூர் கிராமத்தில் உள்ள என் கணவர் மற்றும் ஆஜர் எதிரி நந்தகுமார் ஆகியோர்கள் 2 மாட்டுவண்டிகளை ஓட்டிக்கொண்டு சென்று கொண்டிருந்தார்கள். மணல் இறக்குவது சம்மந்தமாக ஆசர் எதிரிக்கும் எனது கணவருக்கும் பிரச்சனை ஏற்பட்டது. இதில் நந்தகுமார் மண்வெட்டியால் எனது கணவரின் இடது கையில் தாக்கியதில் எனது கணவருக்கு இடது கையில் எலும்பு முறிவு ஏற்பட்டது. இந்த சம்பவம் காலை 10.30 மணிக்கு திருவக்கரையில் உள்ள என் வீட்டில் நான் இருந்தபோது யாரோ சிலர் இருச்ககர வாகனத்தில் எனது கணவரை என் வீட்டிற்கு அழைத்து வந்தார்கள். என் கணவர் மேற்படி சம்பவத்தை என்னிடம் சொன்னார். பின்பு என் கணவரை என் அண்ணன் பெரியசாமி சிகிச்சைக்காக புதுவை ஜிப்மர் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். நான் திருவக்கரையில் உள்ள மாரியம்மன் கோயில தெருவில் உள்ள நந்தகுமாரின் மச்சான் ஸ்ரீதரின் வீட்டிற்கு அருகில் உள்ள வாட்டா டேங்கில் அங்கு மட்டும் தான் தண்ணீர் வரும் என்பதால் துணி அலசி கொண்டு இருந்தேன். நான் என் மகன் முத்துராமனுக்கு போன் செய்து மேற்படி தகவலை சொல்லி அங்கு வரசொன்னேன். என் மகன் உடனே அங்கு வந்துவிட்டார். நான் பதட்டத்தில் அங்கு இருந்து ஒரு அடி தூரத்தில் உள்ள ஸ்ரீதர் வீட்டிற்கு சென்று ஸ்ரீதரிடம் கேட்டோம். ஸ்ரீதர் என்னை கட்டையால் தாக்கினார்.

**(அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க முதல் விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)**

ஒம்/-XXXX,

நீதித்துறை நடுவர்,

வானூர்.